**புகழ்ச்சிக் கூட்ட நற்செய்தி**

2019 ஆவணி மாதம் 19ம் திகதி தொடக்கம் 25ம் திகதி வரை

***"அமைதி கொண்டு நானே கடவுள் என உணர்ந்து கொள்ளுங்கள்."***

01. ஆரம்பப் பாடல் புபுது பாடல் இல. 06 "தூய ஆவியாம்……"

02. புகழ்ச்சிக்கான அறிமுகம்: திருப்பாடல் 96:1-2

**"ஆண்டவருக்குப் புதியதொரு பாடல் பாடுங்கள்.**
**உலகெங்கும் வாழ்வோரே**
**ஆண்டவரைப் போற்றிப் பாடுங்கள்.**
**ஆண்டவரைப் போற்றிப் பாடுங்கள்.**
**அவர் பெயரை வாழ்த்துங்கள்.**
**அவர் தரும் மீட்பை நாள்தோறும் அறிவியுங்கள்.."**

இறை வாழ்வை உலகில் ஏற்படுத்துவதற்கு கிறிஸ்துநாதர் வழியாக அழைப்பு பெற்ற நாம் எத்தகைய பேறுபெற்றவர்கள். ஆண்டவருக்குப் புதியதொரு பாடல் பாடுவதற்கு கூடிய புதிய வாழ்வை பெற்றவர்கள் என்ற வகையில் அவரைப் புகழ்வோம். அவரைப் போற்றுவோம். கிறிஸ்துநாதர் எடுத்து வந்த மீட்பின் நற்செய்தி நாளுக்கு நாள் வெளிப்படுத்துவதற்கு வல்லமையை வேண்டுவோம்.
புபுது பாடல் இல. 165 "ஆண்டவருக்கு துதி…"

03. மீளப்பார்த்தல்: கடந்தவார அனுபவங்களை பகிர்ந்து கொள்ளுங்கள்

04. நாளுக்குரிய நற்செய்தி :- திருப்பாடல் 46:10

"**அமைதி கொண்டு நானே கடவுள் என உணர்ந்து கொள்ளுங்கள்.**

எபிரேயர் 4:12

**"கடவுளுடைய வார்த்தை உயிருள்ளது. ஆற்றல் வாய்ந்தது. இருபக்கமும் வெட்டக் கூடிய எந்த வாளினும் கூர்மையானது. ஆன்மாவையும் ஆவியையும் பிரிக்கும் அளவுக்குக் குத்தி ஊடுருவுகிறது. எலும்பு மூட்டையும் மச்சையையும் அவ்வாறே ஊடுருவுகிறது. உள்ளத்தின் சிந்தனைகளையும் நோக்கங்களையும் சீர்தூக்கிப் பார்க்கிறது."**

மேற் குறிப்பிட்ட திரு விவிலிய பகுதிகள் இரண்டையும் தியானிக்கையில் இறைவனுடைய வார்த்தைக்கு இருக்கின்ற வல்லமையை அனுபவிப்பதற்கு எம்மை உள்ளாக்கின்றது. 2018 ஆண்டு முழுவதும் வாழ்வதற்கு எமக்கு கிடைத்த தலைப்பும் "உமது வார்த்தையும் விருப்பமும் அக்கினியாகும் ஆசீர்வாதமாதமாகும்."

05. அருகில் இருக்கும் ஒருவருடன் பகிர்ந்துக் கொள்ளவும்.

i. நீங்கள் உங்கள் வாழ்வில் இறைவனுடைய வார்த்தைக்கு கொடுத்திருக்கின்ற இடம் என்ன?

ii. "**அமைதி கொண்டு நானே கடவுள் என உணர்ந்து கொள்ளுங்கள்**." என்ற வல்லமை மிகுந்த வார்த்தையை உங்களுடைய வாழ்வில் நீங்கள் எந்தளவு அனுபவித்து இருக்கின்றீர்கள்?

- இறைவனுடைய வார்த்தை எமது இதயங்களைப் பற்றி எரியச் செய்யும். பற்றி எரிய செய்து உயிரூட்டும். எம்மை செயல்படுத்துபவர்களாக மாற்றும்.
- இறைவனுடைய வார்த்தையினுள் வாழ்பவர்களினுள் வார்த்தையானவராகிய கிறிஸ்துநாதரை மற்றவர்களுக்கு காண முடியும்.

- நாம் அனுபவிக்கின்ற பலவிதமான சவால்கள், பிரச்சினைகள், போராட்டங்களினுள் இறைவனுக்கு இடமளித்தவாறு அமைதியாக இருப்பதற்கு முடியுமாக இருந்தால் அமைதியாக இருங்கள். நானே கடவுள் என உணர்ந்து கொள்ளுங்கள் என்ற மகா சத்தியத்தை அனுபவிப்பதற்கு எம்மால் முடியும்.

06. எம் பக்கம்

- வாழ்க்கை நிகழ்வினுள் இறை வாாத்தையை தேடுவோம்.
- இறை வார்த்தையை குறித்து ஆழமான தாகத்தை ஏற்படுத்திக் கொள்வோம்.
- இறை வார்த்தை எமது வாழ்விற்கு எடுத்து வருகின்ற சவால் முன்னிலையில் சாட்சி பகிர்வோம்.
- இறை வார்த்தைக்கு, இறை குரலுக்கு செவிமடுப்பதற்கு தினமும் எமது மணித்தியாலத்திற்கு உள்ளாகுவோம்.

07. இறுதிச் பகழ்ச்சி :

புபுது பாடல இல. 58 “உண்மையின் ஆவியானவர்…”